


**18.05.2025**

- **தலைப்பு செய்திகள்**

- தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கான புதிய கொள்கை திட்டங்களை மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.அமித்ஷா இன்று அறிவித்துள்ளார்.
- ஹைதராபாத் தீ விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.
- நாடுமுழுவதும் அருங்காட்சியகங்களை சுற்றுலா பயணிகள் இன்று இலவசமாக பார்வையிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- வேளாண்மை பால் மற்றும் மீன்வள செயல்பாடுகளில் தமிழகம் முன்னிலையில் உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.
- 19 வயதிற்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சேம்பியன்பட்ட இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

**********

**அமித்ஷா**

தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கான புதிய கொள்கை திட்டங்களை மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.அமித்ஷா அறிவித்துள்ளார்.

அஹமதாபாத்தில், சர்வதேச கூட்டுறவு ஆண்டு கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக "வளர்ந்த இந்தியாவில் கூட்டுறவுகளின் பங்கு" என்ற தலைப்பிலான மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர் வரும் 2029ஆம் ஆண்டிற்குள் நாடுமுழுவதும் உள்ள பஞ்சாயத்துகளில் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இச்சங்கங்களின் பொருளாதார மறுமலர்ச்சியை கருத்தில் கொண்டு கூட்டுறவு சங்கங்களுக்கிடையேயான ஒத்துழைப்பிற்கு அதி முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றார்.

இரண்டு நாள் பயணமாக அங்கு சென்றுள்ள அவர் சத்ரா கிராமத்தில் உருளை கிழங்கு பதப்படுத்தும் தொழிற்சாலையையும் இன்று பிற்பகல் திறந்துவைக்கிறார்.

**********

பிரதமர் நிவாரணம்

ஹைதராபாத் குல்சார் ஹவுஸ் அருகே குடியிருப்பு பகுதியில் இன்று காலை நேரிட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்ச ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்க உத்தரவிட்டுள்ளார்.

சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்ட மத்திய நிலக்கரி சுரங்கத்துறை அமைச்சர் திரு.கிஷண் ரெட்டி பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை உடனடியாக வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இத்தீவிபத்தில் படுகாயமடைந்த 9 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**********

சஞ்சய் சேத்

மலேசிய லங்காவியில் 17ஆவது சர்வதேச கடல்சார் மற்றும் விண்வெளி கண்காட்சியில் இந்தியா சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்கை மத்திய

பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் திரு.சஞ்சய் சேத் நாளை மறுநாள் தொடங்கிவைக்க உள்ளார்.

5 நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியில் டார்னியர் விமானம், இந்திய கப்பற்படை கப்பல் உள்ளிட்டவைகள் இடம்பெற்றுள்ளன.

இப்பயணத்தின் ஒருபகுதியாக அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.டட்டோ செரி முகமதுவை திரு.சஞ்சய் சேத் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

**********

**கிரண் ரிஜிஜு**

ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கைகளை உலக நாடுகளுக்கு விளக்கும் வகையில் 7 அனைத்து கட்சி குழுக்கள் விரைவில் அனுப்பப்படும் என்று நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

பிஜேபியின் திரு.ரவிசங்கர் பிரசாத், பை ஜெயந்த் பாண்டா,

காங்கிரஸின் திரு.சசிதரூர்,

திமுகவின் திருமதி கனிமொழி

ஐக்கிய ஜனதாதளின் திரு.சஞ்சய் குமார் ஜா,

தேசியவாத காங்கிரஸ் கட்சியின் சுப்ரியா சுலே

சிவசேனாவின் திரு. ஏக்னாத் ஷிண்டே ஆகியோர் தலைமையில் 51 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்குழுவினர் அமெரிக்கா, பிரேசில், ரஷ்யா, ஜப்பான் சிங்கப்பூர், ஃபிரான்ஸ், ஜெர்மனி, சவுதி அரேபியா, அல்ஜீரியா, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட 32 நாடுகளுக்கு செல்ல உள்ளனர்.

**********

**வர்த்தக இயக்குனரகம்**

வங்க தேசத்திலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படும் ஆயத்த ஆடைகள், பழங்கள், பதப்படுத்தப்பட்ட உணவுபொருட்கள் உள்ளிட்டவைகளுக்கு புதிய கட்டுப்பாடுகளை வெளிநாட்டு வர்த்தக இயக்குனரம் அறிவித்துள்ளது.

இந்த கட்டுப்பாடுகள் உடனடியாக அமலுக்குவருவதாகவும் கூறியுள்ளது.

இருப்பினும் இந்தியா வழியாக நேபாளம், பூட்டான் நாடுகளுக்கு செல்லும் பொருட்களுக்கு இக்கட்டுப்பாடுகள் பொருந்தாது என்றும் இயக்குனரகம் தெளிவுபடுத்தியுள்ளது.

**********

**செயற்கைகோள்**

ஸ்ரீஹரிகோட்டா சதீஸ்தவான் விண்வெளி மையத்திலிருந்து இன்று விண்ணில் செலுத்தப்பட்ட **PSLV C-61** ராக்கெட் 3ஆவது அடுக்கு பிரிவின்போது ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு குறித்து ஆய்வு செய்யப்பட்டு விரிவான அறிக்கை வெளியிடப்படும் என்று இஸ்ரோ தலைவர் திரு.நாராயணன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் எல்லைகளை கண்காணிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட EOS 9 செயற்கைகோளை இந்த ராக்கெட் சுமந்து சென்றது குறிப்பிடத்தக்கது.

**********

**அருங்காட்சியக தினம்**

சர்வதேச அருங்காட்சியக தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி நாடுமுழுவதும் உள்ள அருங்காட்சியகங்களை சுற்றுலா பயணிகள் இலவசமாக பார்வையிடலாம் என இந்திய தொல்பொருள் ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இந்தியாவின் கலாச்சாரம், பாரம்பரியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்நடவடிக்கை.

வேலூர் கோட்டையில் உள்ள அருங்காட்சியகத்தில் AI தொழில்நுட்பத்துடன் 15 காட்சிகூடங்கள் மேம்படுத்தப்பட உள்ளதாக காப்பாட்ச்சியர் திரு.சரவணன் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**********

**வேளாண்**

அரசின் செயல் திட்டங்களால் வேளாண் வளர்ச்சியில் தமிழகம் முன்னனி மாநிலமாக திகழ்வதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

சென்னையில் இன்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் வேளாண் துறைக்கென 5 தனி நிதிநிலை அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

உணவு தானிய உற்பத்தி சராசரியாக 5.66 சதவிகிதம் உயர்ந்துள்ளதாகவும், பாசன பரப்பு 2.26 லட்சம் ஹெக்டேர் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது..

5 ஆயிரத்து 427 கிலோ மீட்டர் நீள நீர்நிலைகள் தூர்வாரப்பட்டதை அடுத்து 2 லட்சத்து 10 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

வேளாண் துறை இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ் 499 கோடி ரூபாய் மதிப்பில் 62 ஆயிரத்து 820 விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக கூறிய அரசு, மாநிலத்தின் பால் உற்பத்தியை 10 ஆயிரத்து 808 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளதாக தெரிவித்துள்ளது.

2023-24 ஆம் நிதியாண்டில் முட்டை உற்பத்தி 350 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், மாநிலம் முழுவதும் 72 புதிய மீன் இறங்குதளங்கள் ஏற்படுத்தப்பட்டு தரங்கம்பாடி - ராமேஸ்வரம் -திருவொற்றியூர் - குப்பம் ஆகிய பகுதிகளில் மீன்பிடி தொழில்கள் ஊக்குவிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**********

**ஆர்.என்.ரவி**

தஞ்சை தென்னக பண்பாட்டு மையத்தில் நடைபெற்று வரும் சலங்கை நாதம் நிறைவு நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி இன்று பங்கேற்கிறார்.

கடந்த 10ஆம் தேதி தொடங்கிய இந்நிகழ்ச்சியில் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த பாரம்பரிய நடனக்கலைஞர்கள் பங்கேற்றுள்ளனர்.

இதன்ஒருபகுதியாக கைவினை கண்காட்சியும் நடைபெற்று வருகிறது.

**********

**பள்ளிக்கல்வித்துறை**

தமிழகத்தில் 10, 11 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு தற்காலிக மதிப்பெண் பட்டியலை மாணாக்கர் நாளைமுதல் அந்தந்த பள்ளிகளிலேயே பெற்றுக்கொள்ளலாம் என பள்ளிகல்வித்துறை அறிவித்துள்ளது.

தனி தேர்வர்கள் தற்காலிக மதிப்பெண் பட்டியலை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

விடைத்தாள் நகல் பெற விரும்பும் மாணாக்கர் வரும் செவ்வாய்கிழமை முதல் 24ஆம் தேதிவரை பள்ளிகள் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

**********

**மேட்டூர் - கிருஷ்ணகிரி**

**காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும்** மழைகாரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 4 ஆயிரத்து 764 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் 108.52 அடியாகும்.

**கிருஷ்ணகிரி அணை அதன்** முழு கொள்ளளவை எட்ட உள்ளதை அடுத்து பாதுகாப்பு கருதி அணையிலிருந்து வினாடிக்கு ஆயிரத்து 62 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

இதனையடுத்து பெரியமுத்தூர், கால்வேஹள்ளி, சவுட்டள்ளி உள்ளிட்ட 16 ஊராட்சிகளை சேர்ந்த பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறும், கால்நடைகளை ஆற்றில் இறக்க வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**********

**கும்பக்கரை**

தேனி மாவட்டம் கும்பக்கரை அருவியில் பராமரிப்பு பணிகள் நிறைவு பெற்றதை அடுத்து இன்றுகாலை முதல் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**********

**மழை**

**திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை** பகுதிகளில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக கடந்த 100 ஆண்டுகளுக்கு பின்னர் பீமன் நீர்வீழ்ச்சிக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

**வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டை அடுத்த** கொத்தப்பள்ளியில் தொடர் மழை காரணமாக மலட்டாற்றில் ஏற்பட்ட வெள்ள பெருக்கால் அங்கிருந்த மீன்பண்ணையில் இருந்த 15 ஆயிரம் மீன்கள் நீரில் அடித்து செல்லப்பட்டது.

**********

**நாமக்கல்**

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 15 வட்டாரங்களிலும் நடைபெற்று வரும் விவசாயிகளுக்கான வேளாண் நிதி உதவி திட்ட சிறப்பு முகாம்களை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

**********

**புகைப்பட கண்காட்சி**

உதகை கோடை விழாவின் ஒருபகுதியாக புகைப்பட கண்காட்சி நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**********

**போதை பொருள்**

**தமிழகத்தில் போதை பொருள் நடமாட்டத்தை தடுக்கும் வகையில்** காவல்துறையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

**விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் அருகே** வாகன சோதனையின்போது 440 கிலோ தடை செய்யப்பட்ட குட்கா பறிமுதல் செய்யப்பட்டு ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**இதேபோல் ஈரோடு மாவட்டம் பெருந்துறை** சுற்றுவட்டார பகுதியில் போதை பொருள் விற்பனை செய்த நைஜீரிய நாட்டை சேர்ந்த கால்பந்தாட்ட வீரரை மதுவிலக்கு காவல்துறையினர் கைது செய்து 15 லட்ச ரூபாய் மதிப்பிலான போதை பொருட்களை பறிமுதல் செய்தனர்.

**********

**இருவரி**

**பெரம்பலூர் மாவட்டத்தில்** நில உரிமையாளர்கள் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் பெயர் சேர்த்தல், நீக்கம், உள்ளிட்ட திருத்தங்களை மேற்கொள்ள citizen இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

**அரியலூர் மாவட்டத்தில் வருவாய் தீர்வாயம்** ஜமா பந்தி வரும் செவ்வாய்கிழமை தொடங்க உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

**********

**கோவில்**

கள்ளக்குறிச்சி மாவட்டம் பரிக்கல் லக்ஷ்மி நரசிம்மர் கோவில் பிரம்மோற்சவ விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

விழுப்புரம் கடலூர் திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேரை வடம்பிடித்தனர்.

**********

**கால்பந்து**

19 வயதிற்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சேம்பியன்பட்ட இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

**********

**டென்னிஸ்**

ஃபிரான்சில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதிபோட்டியில் இந்தியாவின் யூகிபாம்ரி, அமெரிக்காவின் Robert Galloway இணை – போர்சுகலின் Francisco Cabral ஆஸ்திரியாவின் Lucas Miedler- இணையை இன்று எதிர்கொள்கிறது.

**********

**கிரிக்கெட்**

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் ஜெய்ப்பூரில் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு ராஜஸ்தான் ராயல்ஸ் - பஞ்சாப் கிங்ஸையும்,

டெல்லியில் இரவு ஏழரை மணிக்கு டெல்லி கேப்பிட்டல்ஸ் - குஜராத் டைட்டன்ஸையும் எதிர்கொள்கின்றன.

இப்போட்டியில் குஜராத் டைட்டன்ஸ் வெற்றிபெற்றால் பிளே ஆ.ஃ.ப் சுற்றுக்கு முன்னேறும்.

இதனிடையே சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ராயல்ஸ், சன் ரைசர்ஸ் ஹைதராபாத், அணிகள் பிளே ஆ.ஃ.ப் சுற்றிலிருந்து ஏற்கனவே வெளியேறிய நிலையில் நடப்பு சேம்பியன் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் தொடரிலிருந்து நேற்று வெளியேறியது குறிப்பிடத்தக்கது.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

**********